www.Padasalai.Net www.CBSEtips.in

Loyola

# ஈசி பொருளியல்

LESS STRAIN... SCORE MORE... LOYOLA PUBLICATION, TIRUNELVELI. LP

# 12

புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

வினாவடிவம் எப்படி மாறினாலும்
இப்புத்தகம் 100% பயன் தரும்

Loyola
**Publications**
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696

₹. 220/-

*Less Strain Score More*

Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# www.Padasalai.Net

**Padasalai Official – Android App – Download Here**

**படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!**

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **$9^{th}$ Standard** | Syllabus | Books | Study Materials | $1^{st}$ Mid Term | $2^{nd}$ Mid Term | $3^{rd}$ Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **$8^{th}$ Standard** | Syllabus | Books | Study Materials | $1^{st}$ Mid Term | $2^{nd}$ Mid Term | $3^{rd}$ Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **$7^{th}$ Standard** | Syllabus | Books | Study Materials | $1^{st}$ Mid Term | $2^{nd}$ Mid Term | $3^{rd}$ Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **$6^{th}$ Standard** | Syllabus | Books | Study Materials | $1^{st}$ Mid Term | $2^{nd}$ Mid Term | $3^{rd}$ Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **$1^{st}$ to $5^{th}$ Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

ஆசிரியர்கள் :

திரு. **S. வேதமூர்த்தி** M.A., M.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
சொக்கலால் மேல்நிலைப்பள்ளி,
முக்கூடல்.

திரு. **K. முருகன்** M.A., M.Phil., B.Ed.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி,
மீனாட்சிபுரம், திருநெல்வேலி சந்திப்பு.

திரு. **V. சங்கர ராமன்** M.A., M.Ed., M.Sc., Yoga
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
தீர்த்தபதி மேல்நிலைப்பள்ளி,
அம்பாசமுத்திரம்.

திரு. **M. திருமலைநம்பி** M.A., M.Phil., B.Ed., PGD ELT
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி,
வடக்கு அரியநாயகிபுரம்.

திருமதி. **K. வித்யா**
முதுகலை பட்டதாரி

Loyola Publications

★

Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## உங்களோடு உள்ளன்போடு

- அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே
- அறிவுசார் ஆசிரியப் பெருந்தகைகளே

**வணக்கமும், வாழ்த்துக்களும்**

- ஈசி பொருளியல் வழிகாட்டி வாயிலாக தங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.
- இவ்வழிகாட்டி 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முழு மதிப்பெண்கள் பெறும் வகையில் எளிய முறையில் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பகுதி வினாக்களுக்கும் உரிய விடைகள் மிகச்சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உங்களது படிப்பின் சிரமத்தை நிச்சயம் சரி செய்யும்.
- PTA வினாத்தாள் மற்றும் அரசு தேர்வு 2020 வினாக்களுக்குரிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- பொதுத்தேர்வின்போது வரைபட வினாக்களுக்கு கட்டாயம் பதில் எழுதவும்.
- ஓய்வுநேரங்களில்வரைபடம், அட்டவணை, தலைப்புகள், துணைத்தலைப்புகளை மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள்.
- உங்களது ஆசிரியரின் வழிகாட்டுதல், உங்களின் கடின உழைப்பு, பெற்றோரின் ஆசி, இந்த ஈசி பொருளியல் வழிகாட்டி மற்றும் இறையருள் உங்களுக்கு முழுமையாய் அமையப் பெற்று தேர்வில் முழு மதிப்பெண் பெற இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.
- இந்த வழிகாட்டி மென்மேலும் சிறக்க நல்லோர் அறிஞர்கள், ஆசிரியப் பெருந்தகையினரின் சீரிய கருத்துக்களை அன்புடன் வரவேற்கிறோம்.

நன்றி!

வாழ்க வளமுடன் ...

மேல் ஆய்வாளர்
**Dr. பி. மரிய ஆல்பர்ட்** **M.A., M.Ed., M.Phil., Ph.D.,**
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்,
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை,2



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பொருளடக்கம்



| அத்தியாயம் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பேரியல் பொருளாதாரம் | 5 |
| 2 | தேசிய வருவாய் | 22 |
| 3 | வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள் | 41 |
| 4 | நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள் | 57 |
| 5 | பணவியல் பொருளியல் | 75 |
| 6 | வங்கியியல் | 93 |
| 7 | பன்னாட்டுப் பொருளியல் | 114 |
| 8 | பன்னாட்டு பொருளாதார அமைப்புகள் | 134 |
| 9 | நிதிப் பொருளியல் | 150 |
| 10 | சுற்றுச்சூழல் பொருளியல் | 171 |
| 11 | பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல் | 190 |
| 12 | புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம் | 206 |
| | பெற்றோர் ஆசிரியர் கழகம் – மாதிரி வினாத்தாள் | 223 |
| | அரசு தேர்வு வினாத்தாள் – மார்ச்-2020 | 241 |



★

Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அத்தியாயம் 1

# பேரியல் பொருளாதாரம்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க**

1. **பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை.** [PTA-6]
அ) சொத்து மற்றும் நலமும் ஆ) உற்பத்தி மற்றும் நுகர்வு
இ) தேவையும் மற்றும் அளிப்பும் ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்
**விடை : ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்**

2. **"மேக்ரோ" (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?**
அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்ஸ்
இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்
**விடை : இ) ராக்னர் பிரிக்ஸ்**

3. **" நவீன பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?** [மார்ச்-2020]
அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்ஸ்
இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்
**விடை : ஆ) ஜே.எம்.கீன்ஸ்**

4. **பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?** [PTA-1]
அ) விலை கோட்பாடு ஆ) வருவாய் கோட்பாடு
இ) அங்காடி கோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு
**விடை : ஆ) வருவாய் கோட்பாடு**

5. **பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு.** [PTA-2, மார்ச்-2020]
அ) தனி நபர்கள் ஆ) நிறுவனங்கள்
இ) நாடு ஈ) மொத்தங்கள் **விடை : ஈ) மொத்தங்கள்**

6. **ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.**
அ) நாடுகளின் செல்வம் ஆ) பொது கோட்பாடு
இ) மூலதனம் ஈ) பொது நிதி
**விடை : ஆ) பொது கோட்பாடு**

7. **பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ________ ஆகும்.**
அ) மொத்த விலைக் குறியீடு ஆ) வாணிபச் சுழல்
இ) பண வீக்கம் ஈ) தேசிய வருவாய்
**விடை : இ) பண வீக்கம்**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.** [PTA-5]
அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது
ஆ) தடைகளை முறியடிப்பது
இ) வளர்ச்சியை அடைவது
ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும் **விடை : ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

**9. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.**
அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ) உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை
**விடை : இ) உற்பத்தி மற்றும் நுகர்வு**

**10. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது.** [PTA-4]
அ) உற்பத்தி துறை ஆ) நுகர்வு துறை
இ) அரசு துறை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
**விடை : ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

**11. எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?**
அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) சமத்துவ அமைப்பு
இ) உலகமய அமைப்பு ஈ) கலப்புப் பொருளாதார அமைப்பு
**விடை : அ) முதலாளித்துவ அமைப்பு**

**12. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு ________ ஆகும்.**
அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) உலகமயத்துவ அமைப்பு
இ) கலப்புப் பொருளாதார அமைப்பு ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு
**விடை : ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு**

**13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?**
அ) ஆடம்ஸ்மித் ஆ) காரல் மார்க்ஸ்
இ) தக்கேரி ஈ) ஜே.எம்.கீன்ஸ் **விடை : அ) ஆடம்ஸ்மித்**

**14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு ________ ஆகும்.** [PTA-3]
அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா
இ) இந்தியா ஈ) சீனா **விடை : ஆ) அமெரிக்கா**

**15. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி.** [PTA-1]
அ) ஜே.எம்.கீன்ஸ் ஆ) காரல் மார்க்ஸ்
இ) ஆடம்ஸ்மித் ஈ) சாமுவேல்சன் **விடை : ஆ) காரல் மார்க்ஸ்**

**16. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ________ ஆகும்.** [PTA-6]
அ) முதலாளித்துவ பொருளாதாரம் ஆ) சமத்துவ பொருளாதாரம்
இ) உலகமயத்துவ பொருளாதாரம் ஈ) கலப்புப் பொருளாதாரம்
**விடை : ஈ) கலப்புப் பொருளாதாரம்**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ________ ஆகும்.**

அ) உற்பத்தி ஆ) இருப்பு
இ) மாறிலி ஈ) ஓட்டம் **விடை : ஆ) இருப்பு**

**18. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.**

அ) பண அளிப்பு ஆ) சொத்துக்கள்
இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு **விடை : இ) வருவாய்**

**19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக.** [PTA-4]

அ) குடும்பங்களும் நிறுவனங்களும்
ஆ) தனியார் மற்றும் பொதுத்துறை
இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத்துறைகள்
ஈ) நிறுவனங்களும் அரசும் **விடை : அ) குடும்பங்களும் நிறுவனங்களும்**

**20. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது____ ஆகும்.** [PTA-2]

அ) இரு துறை மாதிரி ஆ) முத்துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

**விடை : இ) நான்கு துறை மாதிரி**

## பகுதி - ஆ

## ஓரிரு வார்த்தையில் விடையளி

**1. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.** [PTA-4]

பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது,

**2. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.** [மார்ச்-2020]

பணவீக்கம் என்பது பணத்தின் மதிப்பு குறைவதும், பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டே செல்வதைக் குறிப்பதாகும்.

**3. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?** [PTA-1, 5]

“மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்து கொள்ளும் முறையை குறிப்பது பொருளாதாரம் ஆகும்”– – A.J பிரவுன்

**4. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

**5. முதலாளித்துவம் என்றால் என்ன?**

பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் காணப்படும். முதலாளித்துவ நாட்டிற்கு உதாரணம்: அமெரிக்க ஐக்கிய நாடு (USA)




Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**6. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.** [PTA-6]

1. பொருளாதார மாதிரி என்பது உண்மையான சூழலை விளக்குவது.
2. பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகின்றது.
3. கணிதம், வரைபடம், சமன்பாடு போன்ற பொருளாதார மாறிலிகளின் உறவை எளிய முறையில் விளக்குகின்றது.

**7. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" - வரையறு.** [PTA-2 & 3]

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள உறவினையும், தொடர்பினையும் விளக்குவது வருமான வட்ட ஓட்டம் எனப்படும்.




## பகுதி - இ

### ஒரு பத்தி அளவில் பதில் தருக

**1. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக.** [PTA-5, மார்ச்-2020]

1. பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அதற்கு தேவையான யுக்திகளைக் கண்டு தீர்வு காணவும் உதவுகின்றது.
2. எதிர்கால பிரச்சினைகளை தெரிந்து கொள்ளவும், அதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றது.
3. நடப்பு பிரச்சினைகளை அறிவியல்பூர்வமாக தீர்வு காண உதவுகின்றது.
4. பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை முன்கூட்டியே அறியவும் உதவுகின்றது.

**2. பொருளாதார அமைப்புகளின் வகைளை குறிப்பிடுக.**

1. **வளர்ச்சி நிலை:** வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.
2. **நடவடிக்கைகளின் முறை:** முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.
3. **நடவடிக்கைகளின் அளவு:** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.
4. **செயல்படும் தன்மை:** நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.
5. **செயல் பரப்பு தன்மை:** மூடிய மற்றும் திறந்தவெளி பொருளாதார அமைப்புகள்
6. **முன்னேற்ற தன்மை:** பழமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்
7. **தேசிய வருவாய் அளவு:** குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 4)** [PTA-6]

1. **தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரை சட்டம்:** முதலாளித்துவத்தின் அனைத்து வளங்களுடம தனி நபர்களுக்கு சொந்தமானது. உரிமையாளர்கள் இறப்பிற்கு பின் அவர்களின் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.
2. **தேர்வு செய்வதில் (தெரிந்தெடுப்பதில்) சுதந்திரம்:** தனி நபர் உரிமையான பொருளை உற்பத்தி செய்யவும், வியாபார இடத்தை தெரிவு செய்யவும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர்.
3. **இலாப நோக்கம்:** உற்பத்தியாளர்கள் பின்பற்றுகின்ற "தங்க விதி"யான உச்ச லாபம் அடைவதில் முழு நோக்கமாக இருப்பர்.
4. **போட்டியிடும் சுதந்திரம்:** லாப நோக்கில் உற்பத்தி அமைவதால், சந்தையில் போட்டி அதிகமாகவும், சுதந்திரமாகவும் காணப்படும்.
5. **விலை இயங்குமுறை:** விலை முதலாளித்துவத்தின் இதயமாகும். தேவை மற்றும் அளிப்பு மூலம் விலையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர்.
6. **அரசின் பங்கு:** அடிப்படை பிரச்சினைகளை மட்டும் கவனிப்பதில் அரசின் பங்கு பொருளாதாரத்தில் குறைவு.
7. **வருமான ஏற்றத்தாழ்வு:** ஏழை, பணக்காரன், இருப்பவர், இல்லாதவர் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படும்.

4. **சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.** [PTA-1]

1. **சிவப்பு நாடா நிலை:** அனைத்து அதிகாரங்களும் அரசாங்கத்திடம் இருப்பதால், அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறுவதில் கால தாமதமும், சிவப்பு நாடா நிலை அமைய காரணமாகும்.
2. **ஊக்கமின்மை:** திறமைக்கு எந்த ஊக்கமும் அளிக்க வாய்ப்பு இல்லை.
3. **தெரிவு செய்வதில் சுதந்திரக் குறைவு:** பண்டங்கள் மற்றும் பணிகள் தேர்வு செய்வதில் சுதந்திரம் கிடையாது.
4. **அதிகாரம் குவிதல்:** அனைத்து முடிவுகளும் அரசாங்கம் எடுப்பதால் பொருளாதாரத்தில் உற்பத்தி பாதிப்பு ஏற்படும். மேலும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும்.

5. **கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக: (ஏதேனும் 4)** [PTA-2]

1. **சொத்து உற்பத்தி சாதனங்களின் உரிமம்:** உற்பத்தி காரணிகள் தனியார் மற்றும் அரசாங்கம் இரண்டிற்கும் சொந்தமாக இருப்பதால் உரிமை கொள்ள வாய்ப்பு உள்ளது.
2. **பொதுத்துறை மற்றும் தனியார் துறை இணைவு:** தனியார் இலாப நோக்குடனும், பொதுத்துறை சமூக நல நோக்குடனும் செயல்படுவதால் பொருளாதாரம் சீரான நிலையில் காணப்படும்.
3. **பொருளாதாரத் திட்டமிடல்:** பொதுவாக அனைத்து திட்டங்களும் வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், முன்னுரிமைகள், இலக்குகள் அடிப்படையில் எல்லா துறைகளும் செயல்படும்.
4. **பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு:** பொருளாதார அடிப்படை பிரச்சினைகளை விலை இயங்குமுறை, அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
5. **சுதந்திரமும், கட்டுப்பாடும்:** தனியார் சுதந்திரமாக உற்பத்தியில் ஈடுபட்டாலும், ஒட்டுமொத்த கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




**6. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக. (ஏதேனும் 4)** [மார்ச்-2020]

| | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை தனியார் வசம் உள்ளது. | உற்பத்தி மூலங்களின் உரிமை அரசாங்கத்திடம் உள்ளது. |
| 2 | பொருளாதார நோக்கம் லாப நோக்கமாக காணப்படும். | சமூக நலன் கொண்டு செயல்படும். |
| 3 | தடையில்லா சந்தை முறை அங்காடி காணப்படும். | மத்திய திட்டக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படும். |
| 4 | அரசின் பங்கு குறைவு. கட்டுப்பாடும் அதிக அளவு காணப்படும். | அரசாங்கம் முழு ஈடுபாடு கொண்டு உற்பத்தியில் செயல்படும். |
| 5 | சமனற்ற நிலையில் வருவாய் காணப்படும். | வருவாய் சமநிலையில் காணப்படும். |

**7. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.**

இதில் இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டும் காணப்படும்.




1. **இல்லத்துறை:** இத்துறையில் அனைத்து வருவாயையும், நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.
2. **நிறுவனத்துறை:** இத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகிறது.

$Y = C + I$ y என்பது வருவாய்; C என்பது நுகர்வு; I என்பது முதலீடு

## பகுதி – ஈ

## ஒரு பக்க அளவில் விடையளி

**1. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.** [PTA-1]

பேரியல் பொருளாதாரம் மிக பெரியதாகவும், முக்கிய பகுதிகளை உடையதாகவும் காணப்படும்.

1. **தேசிய வருவாய்:** தேசிய வருவாய் என்பது பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சமாகும். நாட்டின் வருவாய் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி நிலையை நீண்ட காலத்தில் விளக்குவதாகும்.
2. **பண வீக்கம்:** பண வீக்கம் என்பது விலையின் உயர்வை உணர்த்துவதாகும். மொத்த விலை குறியீட்டெண் நுகர்வோர் குறியீட்டெண் இரண்டும் மொத்த விலை அளவை மதிப்பிட அவசியமான ஒன்றாகும்.
3. **வாணிப சுழற்சி:** வாணிப சுழற்சி என்பது வாணிபத்தில் ஏற்படும் மாற்றங்களை விளக்குவது. செழிப்பு, மந்தம், மீட்பு என பொருளியலின் ஏற்ற இறக்கத்தை உணர முடியும்.
4. **வறுமை மற்றும் வேலையின்மை:** வறுமை மற்றும் வேலையின்மை எல்லா நாடுகளிலும் காணப்படும் மிகப்பெரிய பிரச்சனையாகும். அதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்து சரியான நடவடிக்கையை மேற்கொள்ள பேரியல் உதவுகிறது.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. **பொருளாதார வளர்ச்சி:** பேரியல் பகுத்தாய்வின் மூலம்தான் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதனை தீர்மானிக்கும் காரணிகளை புரிந்து கொள்ள முடியும்.
6. **பொருளாதார கொள்கைகள்:** பொருளாதார கொள்கைகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது. அடிப்படை பிரச்சனைகளை தீர்வு காணவும், வளர்ச்சி தடைகளை நீக்கவும் பேரியல் உதவுகிறது.

**2. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.** [PTA-2 & 5]

பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ அல்லது பகுதியையோ குறிப்பதாகும்.

1. **வளர்ச்சி நிலை:** மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பதாகும். பொருளாதார பணிகள் அல்லது நடவடிக்கை எவ்வாறு செயல்படுகின்றது என்பதை விளக்குவது வளர்ச்சி நிலையாகும்.
2. **உற்பத்தி நடவடிக்கை:** பொருளாதார வளர்ச்சி நடவடிக்கையில் உற்பத்தி மிகவும் அவசியமானது. இது பல்வேறு பொருளாதார செயல்பாட்டிற்கு அவசியமானது.
3. **நுகர்வு நடவடிக்கை:** உற்பத்தியைப் போன்று நுகர்வும் பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை அம்சமாகும். நுகர்வு பொருளாதார வளர்ச்சி நிலையை காட்டுவது. மேலும் உற்பத்தியை தூண்டுவது ஆகும்.
4. **பகிர்வு நடவடிக்கை:** உற்பத்தி நடவடிக்கை மற்றும் நுகர்வு நடவடிக்கை இரண்டும் செயல்பட உதவுவது பகிர்வு நடவடிக்கையாகும். பகிர்வு என்பது பொருளாதாரம் மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதுகாக்கப்படுகின்றது.
5. **பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகள்:** போக்குவரத்து, வங்கி பணி, விளம்பரம் திட்டமிடல், அரசின் கொள்கைகள் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை நெறிப்படுத்துதல் போன்றவை பொருளாதாரமற்ற நடவடிக்கைகள் ஆகும்.
6. **வெளிப்புற நடவடிக்கைகள்:** ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மாற்று வருவாய் போன்றவை வெளிப்புற நடவடிக்கைகள் ஆகும்.

**3. முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.** [PTA-3, 4 & 6]

| | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| 1 | உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகியவற்றின் உரிமை தனியார் வசம் காணப்படும் | உற்பத்தி காரணிகளின் உரிமை அனைத்தும் அரசு தன் கைவசம் வைத்துக் கொள்ளும். |
| 2 | முதலாளித்துவத்தில் இலாபம் என்பது உச்ச நிலையை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | சமத்துவத்தில் சமூக நலன் கொண்டு செயல்படுவதால் இயல்பு லாபம் மட்டும் அடைவார்கள். |
| 3 | எப்போதும் முதலாளித்துவத்தின் மையப் பிரச்சனையாக காணப்படுவது தடையில்லா வாணிப முறையாகும். | மத்திய திட்டக்குழு பரிந்துரையின் அடிப்படையில் பிரச்சனைகள் தீர்வு செய்யப்படும். |
| 4 | உள்ளீடுகளை கட்டுப்படுத்துவது மட்டும் அரசின் பங்காக காணப்படும். | முழு ஈடுபாடு கொண்டு அரசு செயல்படும். |



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 5 | சமனற்ற நிலையில் வருவாய் பங்கீடு அமையும். | சம நிலையில் வருவாய் பங்கீடு காணப்படும். |
| 6 | தனியார் நிறுவனமாக செயல்படும். | அரசு நிறுவனமாக செயல்படும். |
| 7 | முழுமையான பொருளாதார சுதந்திரம் காணப்படும். | பொருளாதாரத்தில் சுதந்திரம் காணப்படாது. அரசு தலையீடு காணப்படும். |

**4. முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**

| | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை. | தனியார் வசம் உள்ளது. | பொது துறை உரிமை | தனியார் மற்றும் பொது துறை உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | லாபத்தின் உச்ச நோக்கம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டக்குழு முறை | மத்திய திட்டக்குழு முறை மற்றும் தடையில்லா சந்தை முறை |
| 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழுமையான உற்பத்தி கட்டுப்பாடு | குறைவான பங்கு |
| 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை பங்கீடு | சமநிலை பங்கீடு | குறையாத சம நிலையற்ற நிலை பங்கீடு |
| 6 | நிறுவன தன்மை | தனியார் நிறுவனமாகும் | அரசு நிறுவனம் ஆகும் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் இணைந்து காணப்படுவது |
| 7 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் காணப்படும் | சுதந்திரமின்மை காணப்படும் | கட்டுப்பாடுகளுடன் கூடிய சுதந்திரம் காணப்படும் |
| 8 | முக்கிய பிரச்சனையாக காணப்படுவது | சமமின்மை நிலை காணப்படும் | திறனின்மை நிலை காணப்படும் | சமமின்மை மற்றும் திறனின்மை நிலை காணப்படும் |

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக

1.

| | | | |
|---|---|---|---|
| A | நுண்ணியல் | 1 | J.M.கீன்ஸ் |
| B | பேரியல் | 2 | நுண்ணியல் பொருளியல் |
| C | நாட்டு வருமானம் | 3 | ராக்னர் பிரிஷ் |
| D | தனிநபர் வருமானம் | 4 | பேரியல் பொருளியல் |

★



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

**விடை : ஆ) (A) 3 ; (B) 1 ; (C) 4 ; (D) 2**

2.

| | | | |
|---|---|---|---|
| A | பேரியல் பொருளியல் | 1 | தேசிய கணக்குகள் |
| B | நுண்ணிய பொருளியல் | 2 | மந்த நிலை |
| C | வாணிப சுழற்சி | 3 | வருவாய் கோட்பாடு |
| D | வருவாயின் வட்ட ஓட்டம் | 4 | விலை கோட்பாடு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 3 | 4 |
| ஆ) | 1 | 2 | 4 | 3 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

**விடை : ஈ) (A) 3 ; (B) 4 ; (C) 2 ; (D) 1**

3.

| | | | |
|---|---|---|---|
| A | முதலாளித்துவம் | 1 | வடகொரியா |
| B | பொதுவுடைமை | 2 | அமெரிக்கா |
| C | சமத்துவ சார்பு | 3 | இந்தியா |
| D | கலப்புப் பொருளாதாரம் | 4 | சீனா |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 1 | 3 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடை : அ) (A) 2 ; (B) 4 ; (C) 1 ; (D) 3**

## II. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) பேரியல் பொருளியலின் தந்தை - ஆதம் ஸ்மித்
ஆ) சமத்துவத்தின் தந்தை - J.M.கீன்ஸ்
இ) விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் - மேன்பிரட்.டி.ஸ்டீகர்
ஈ) முதலாளித்துவத்தின் தந்தை - கார்ல் மார்க்ஸ்

**விடை : இ) விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம்-மேன்பிரட்.டி.ஸ்டீகர்**

2. அ) முதலாளித்துவ பொருளாதாரம் - வெளிநாட்டு மாற்று இருப்பு
ஆ) சமத்துவப் பொருளாதாரம் - சந்தைப் பொருளாதாரம்
இ) இருப்பு மாறிலி - கட்டளைப் பொருளாதாரம்
ஈ) ஓட்ட மாறிலி - நுகர்வு

**விடை : ஈ) ஓட்ட மாறிலி-நுகர்வு**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. அ) Y - அரசு
ஆ) C - நுகர்வு
இ) I - வருமானம்
ஈ) G - முதலீடு

**விடை : ஆ) C–நுகர்வு**

## III. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) இரு துறை பொருளாதாரம் - Y = C + G
ஆ) மூன்று துறை பொருளாதாரம் - Y = C + I + G
இ) நான்கு துறை பொருளாதாரம் - Y = C + I + G + (X –M)
ஈ) சமத்துவப் பொருளாதாரம் - திட்டமிட்ட பொருளாதாரம்

**விடை : அ) இருதுறை பொருளாதாரம்-Y = C + G**

2. அ) முதலாளித்துவ பொருளாதாரம் - U.S.A, மேற்கு ஜெர்மனி
ஆ) சமத்துவப் பொருளாதாரம் - ஆஸ்திரேலியா, ஜப்பான்
இ) கலப்பு பொருளாதாரம் - பிரான்சு, பிரேசில்
ஈ) உலகத்துவம் - பன்னாட்டு வணிகம்

**விடை : இ) கலப்பு பொருளாதாரம் - பிரான்சு, பிரேசில்**

3. அ) சிகப்பு நாடா முறை - தலையிடாக் கொள்கை பொருளாதாரம்
ஆ) அதிகார வர்க்கம் - சமத்துவப் பொருளாதாரம்
இ) இலாப நோக்கம் - முதலாளித்துவம்
ஈ) பழக்க வழக்கங்கள் - பழமை பொருளாதாரம்

**விடை : அ) சிகப்பு நாடா முறை-தலையிடாக் கொள்கை பொருளாதாரம்**

## IV. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) பொருளாதாரத்தில் முதல் நோபல் பரிசு J.M.கீன்சு அவர்களுக்கு வழங்கப்பட்டது.
ஆ) வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக்கோட்பாடு என்ற நூலை எழுதியவர் ராக்னர் ஃபிரிஸ்ச்.
இ) நுண்ணியல் பொருளாதாரம் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் பற்றியதாகும்.
ஈ) பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலை வாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது.

**விடை : ஈ) பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலை வாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது.**

2. அ) "நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" - A.J.பிரவுன்
ஆ) பொருளாதார அமைப்பு என்பது "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பது" - J.R.ஹிக்ஸ்
இ) பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.
ஈ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கும்.

**விடை : இ) பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) சமத்துவ பொருளாதாரத்தில் வருவாய் மற்றும் செல்வம் பகிர்தலில் சமத்துவம் மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகிறது.
   ஆ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி வளங்கள் தனியார் மற்றும் அரசிடம் இருக்கும்.
   இ) இருப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கணக்கிடப்படும் பொருட்களின் அளவினைக் குறிப்பதாகும்.
   ஈ) ஓட்டம் என்பவை ஒரு குறிப்பிட்ட காலகட்ட அளவில் கணக்கிடப்படுபவையாகும்.

   **விடை : ஆ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி வளங்கள் தனியார் மற்றும் அரசிடம் இருக்கும்.**

2. அ) ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்திற்கும் பல்வேறு நாடுகளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.
   ஆ) இரண்டு துறை மாதிரி என்பது இல்லங்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்ட எளிய பொருளாதாரம்.
   இ) மூன்று துறை மாதிரி கலப்பு மற்றும் மூடிய பொருளாதாரத்திற்குரியது.
   ஈ) நான்கு துறை மாதிரி திறந்த பொருளாதார அமைப்புக்குரியதாகும்.

   **விடை : அ) ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்திற்கும் பல்வேறு நாடுகளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.**

## VI. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) இல்லங்கள் ஆ) நிறுவனங்கள் இ) அரசு ஈ) உள் துறை

   **விடை : ஈ) உள்துறை**

2. அ) பழமை பொருளாதாரம் ஆ) சமத்துவப் பொருளாதாரம்
   இ) உலகத்துவம் ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்

   **விடை : இ) உலகத்துவம்**

3. அ) செழிப்பு ஆ) நீட்சி இ) பின்னறக்கம் ஈ) மந்த நிலை

   **விடை : ஆ) நீட்சி**

## VII. கூற்று-காரணம் கண்டறிந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு.
ஈ) கூற்று (A), காரணம் (R) இரண்டும் தவறு.

1. **கூற்று (A)** : முதலாளித்துவ பொருளாதாரத்தில், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும்.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**காரணம் (R)** : முதலாளித்துவத்தில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற தங்க விதி "உச்ச இலாபம்" அடைதல்

**விடை : அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.**

2. **கூற்று (A)** : சமத்துவப் பொருளாதாரத்தில் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கிப் பயன்படுத்தும்.

**காரணம் (R)** : சமத்துவப் பொருளாதார அமைப்பில் பொது நலமே அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும்.

**விடை : அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.**

3. i) நவீன நுண்ணியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார். **[PTA-5]**

ii) நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார்.

அ) i மற்றும் ii சரியானது ஆ) i மற்றும் ii தவறானது

இ) i சரியானது ஆனால் ii தவறானது ஈ) i தவறானது ஆனால் ii சரியானது

**விடை : ஈ) i தவறானது ஆனால் ii சரியானது**

## VIII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. **பண வீக்கம் என்பது**

அ) விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு அதிகரிப்பது

ஆ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு குறைவது

இ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு அதிகரிப்பது

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : ஆ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு குறைவது**

2. **உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை உருவாக்கியவர்**

அ) ஏ.ஜெ.பிரவுன் ஆ) மேன் பிரட்டிஸ்டீகர்

இ) J.R.ஹிக்ஸ் ஈ) J.M.கீன்ஸ்

**விடை : ஆ) மேன் பிரட்டிஸ்டீகர்**

3. **முதலாளித்துவ பொருளாதாரத்தின் அடிப்படை நோக்கம்**

அ) சமூக நலன் ஆ) பொதுவுடமை

இ) இலாபம் ஈ) தனியார் சுதந்திரம் **விடை : இ) இலாபம்**

4. **கலப்பு பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள்**

அ) இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ்

ஆ) இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, பிரேசில்

இ) இந்தியா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ்

ஈ) இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில்

**விடை : ஈ) இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில்**

5. **வறுமை & வேலையின்மைக்கு தீர்வு**

அ) வளங்களை ஒதுக்கீடு செய்தல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ஆ) பகிர்வை தீர்மானித்தல், அரசின் பங்கை அதிகரித்தல்



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இ) உற்பத்தியை அதிகரித்தல், முதலீட்டை அதிகரித்தல்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : அ) வளங்களை ஒதுக்கீடு செய்தல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

6. **பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு**
அ) நுண்ணியல் பொருளாதாரம் ஆ) சமவுடமை பொருளாதாரம்
இ) கலப்பு பொருளாதாரம் ஈ) பேரியல் பொருளாதாரம்

**விடை : இ) கலப்பு பொருளாதாரம்**

7. **பொருளாதார அமைப்பு முறைகள்**
அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 2 **விடை : இ) 3**

8. **முக்கிய பொருளாதார அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் ________ வருவாயின் வட்ட ஓட்ட மாதிரிகள்.**
அ) 4 ஆ) 3 இ) 5 ஈ) 2 **விடை : ஆ) 3**

9. **பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு முறை**
அ) 3 ஆ) 5 இ) 2 ஈ) 4 **விடை : அ) 3**

10. **நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் ஓட்டம்**
அ) $y = C + I + G + (X / M)$ ஆ) $y = C + I + G + (X - M)$
இ) $y = C + I + G + (X + M)$ ஈ) $y = C + I + G + (X \times M)$

**விடை : ஆ) $y = C + I + G + (X - M)$**

## IX. ஓரிரு வார்த்தையில் விடையளி

1. **பொருளியலின் இரண்டு பிரிவுகள் யாவை?**
   1. நுண்ணியல் பொருளாதாரம்
   2. பேரியல் பொருளாதாரம் என இரு பிரிவுகள் உள்ளன.

2. **தேசிய வருவாய் (நாட்டு வருமானம்) என்றால் என்ன?**
ஒரு நாட்டில் ஓர் ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு மற்றும் பணிகளின் மதிப்பைக் குறிப்பதாகும்.

3. **வேலையின்மை என்றால் என்ன?**
வேலை செய்ய தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது வேலையின்மை என்று பெயர்.

4. **உலகத்துவம் என்பதன் பொருள் யாது?**
பன்னாட்டு வாணிபத்தில் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர் நோக்கும் உலகமயமாக்குதல் என்பதாகும்.

5. **கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?**
கலப்பு பொருளாதாரம் என்பது தனியார் துறை மற்றும் பொதுத்துறை இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்கு பணியாற்றுவது. இதில் முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் இணைந்த கலவையாகும்.

6. **பொருளாதார அமைப்பு என்றால் என்ன?**
மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பது. - ஏ.ஜே.பிரவுன்



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**7. பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கைகள் யாவை?**

1. உற்பத்தி நடவடிக்கை
2. நுகர்வு நடவடிக்கை

**8. பொருளாதார அமைப்பு முறைகள் என்றால் என்ன?**

பொருளாதார அமைப்பு முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும், நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும்.

**9. சிகப்பு நாடா நிலை என்றால் என்ன?**

அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால் அலுவலர்களின் அனுமதி பெற கோப்புகள் மேஜையில் தங்கி இருக்க வாய்ப்பு உள்ளது. இதை சிவப்பு நாடா நிலை என்பர்.

**10. வருவாய் வட்ட ஓட்டம் என்பதன் பொருள் யாது?**

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவது ஆகும். இந்நிறுவனம், குடியிருப்பு அரசாங்கம், மற்றும் நாடுகளுக்கிடையே வருவாய் பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தைக் குறிப்பதாகும்.

## X. ஒரு பத்தி அளவில் விடையளி

**1. பேரியல் பொருளாதாரத்தின் குறைபாடுகள் யாவை?**

1. பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி, பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.
2. எல்லா நிறுவனங்களும் ஒரே தன்மை உடையது என்ற எடுகோளைக் கொண்டது.
3. தொகுத்தாய்வு முறை மேற்கொள்ளும் போது தவறு காணப்பட வாய்ப்பு உள்ளது. எல்லா நாட்டிற்கும் பொருந்துவது இல்லை.
4. பொருளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கின்றன.

**2. முதலாளித்துவத்தின் குறைபாடுகள் யாவை?**

1. முதலாளித்துவத்தில் வருமானம் மற்றும் செல்வம் சிலரது கையில் மட்டும் குவிகிறது. இதனால் நாடுகளில் ஏற்றத்தாழ்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
2. போட்டி விளம்பரங்களினால் இயற்கை வளம் வீணாக்கப்படுகின்றன.
3. முதலாளி, வேலைக்காரர்கள் என இரு பிரிவு ஏற்படவும், வர்க்க போராட்டத்திற்கும் வழிவகுக்கும்.
4. வாணிபச்சுழல் பொருளாதாரத்தில் ஏற்பட்டால் நெருக்கடி நிலை உருவாகும்.
5. அத்தியாவசியமான பொருட்களின் உற்பத்தி ஏற்படாமல் தட்டுப்பாடு ஏற்பட வழிவகுக்கும்.

**3. சமத்துவ பொருளாதாரத்தின் நன்மைகள் யாவை?**

1. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் குறைவு ஏற்படும். சுரண்டல் ஏற்பட வாய்ப்பு இல்லை.
2. மையத்திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. விரயங்கள் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது.
3. ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால் பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை.
4. வாணிக சுழலுக்கான ஒரு முடிவு ஏற்படும். உற்பத்தி மற்றும் பகிர்வு அரசாங்கம் முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும்.
5. சமூக நலனின் முன்னேற்றம் காணப்படும். மக்கள் நலன் உயர அரசு உதவி செய்வதால் ஏற்றத்தாழ்வு இல்லாத பொருளாதாரம் அமையும்.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. **கலப்பு பொருளாதாரத்தின் சிறப்பு பண்புகள் யாவை?**

1. சொத்து, உற்பத்தி சாதனங்களின் உரிமை, தனியார் மற்றும் பொதுத்துறைக்கு சொந்தமாக இருப்பதால் தனியார் துறையும், பொதுத்துறையும் வளங்களை பயன்படுத்த உரிமை பெற்றிருக்கும்.
2. தனியார் துறை, பொதுத்துறை இணைந்து செயல்படுவதால் தனியார் துறை இலாபத்திற்கும், பொதுத்துறை சமூக நலனுக்கும் உற்பத்தி செய்யும்.
3. பொருளாதார திட்டமிடல் தேசிய திட்டமாக இருப்பதால் தனியார் துறையும், பொதுத்துறையும் மதித்து பின்பற்றும்.
4. பொருளாதார அடிப்படை பிரச்சனைகளை விலை இயக்க முறை மற்றும் அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
5. வளங்களின் உரிமை தனியாருக்கு சுதந்திரமாக இருந்தாலும், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.

5. **முதலாளித்துவம் மற்றும் உலகத்துவம் – வேறுபடுத்துக.** [PTA-4]

| | முதலாளித்துவம் | உலகத்துவம் |
|---|---|---|
| 1. | பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் உள்ள அமைப்பே முதலாளித்துவம் ஆகும் | பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர்நோக்கும் புதிய அங்காடி தத்துவமே உலகத்துவம் ஆகும். |
| 2. | முதலாளித்துவத்தின் தந்தை ஆடம்ஸ்மித் ஆவார் | உலகத்துவம் என்ற பதத்தை உருவாக்கியவர் மேன் பிரட்-டி-ஸ்டீகர் |
| 3. | இது தடையில்லா பொருளாதாரம் என்றும் சந்தைப் பொருளாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது. | இந்த தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்று குறிப்பிடப்படுகின்றது. |

## XI. ஒரு பக்க அளவில் விடையளி

1. **முதலாளித்துவத்தின் நன்மை தீமைகளை விவரி.**

**முதலாளித்துவத்தின் நன்மைகள்:**

1. **தானாக இயங்குதல் :** அரசாங்கத்தின் எந்த தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.
2. **வளங்களை திறமையாகப் பயன்படுத்துதல் :** அனைத்து வளங்களும் திறமையாகவும், உத்தம அளவிலும் பயன்படுத்தப்படுகிறது.
3. **கடின உழைப்பிற்கு வெகுமதி :** கடின உழைப்பை ஊக்குவிக்கப்படுவதும், திறமையால் அதிக லாபம் பெறுவதும் காணப்படும்.
4. **பொருளாதார முன்னேற்றம் :** முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மிக அதிகமாகும்.
5. **நுகர்வோர் இறையாண்மை:** அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோர்களை திருப்தி செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்கும்.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



6. **மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல் :** சேமிப்பு முதலீடு அதிகரித்து மூலதன ஆக்க வீதம் உயர வழிவகுக்கும்.
7. **புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் :** இலாபம் பெறுவது நோக்கமாக இருப்பதால் புதிய முறையைக் கையாண்டு உற்பத்தி உயர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**முதலாளித்துவத்தின் குறைபாடுகள்:**

1. **வருமானம் மற்றும் செல்வச் செறிவு :** வருமானம் மற்றும் செல்வம் சிலரது கையில் மட்டும் குவிந்து வருமான ஏற்றத்தாழ்வு அதிகமாகும்.
2. **வளங்கள் வீணாக்கப்படுதல் :** போட்டி விளம்பரங்களினாலும், பொருட்களின் பிரதிகளினாலும் வளங்கள் வீணாக்கப்படும்.
3. **வகுப்புப் போராட்டம் :** சமுதாயத்தை முதலாளிகள், வேலைக்காரர்கள் என பிரித்து வகுப்பு போராட்டத்திற்கு வழிவகுக்கும்.
4. **வாணிபச் சுழல் :** தடையில்லா சந்தை முறையால் அதிக அளவு பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு நெருக்கடி நிலை ஏற்படும்.
5. **அத்தியாவசியமில்லா பொருட்களின் உற்பத்தி :** இலாபத்தைப் பெறுவதற்காக தீங்கு விளைவிக்கும் பொருட்கள் கூட உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

**2. கலப்பு பொருளாதார அமைப்பின் நன்மை தீமைகள் யாவை?**

**கலப்பு பொருளாதார அமைப்பின் நன்மைகள்:**

1. **அதிகவேக பொருளாதார வளர்ச்சி :** இதன் சிறந்த தன்மை அதிவேக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். பொது தேவைகளும் தனியார் தேவைகளும் சந்திக்கப் படுகின்றன.
2. **சமமான வளர்ச்சி :** பொருளாதாரத்தில் சமநிலை வளர்ச்சியை கலப்புத்துவம் ஊக்குவிக்கிறது.
3. **வளங்களை சரியாக பயன்படுத்துதல் :** அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை நேரடியாக கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறையை மறைமுகமாக கட்டுப்படுத்தும்.
4. **பொருளாதார சமத்துவம் :** அரசு வருவாய் வரியை வளர் வீத முறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தைக் கொண்டு வருகிறது.
5. **சமூகத்திற்கு சிறப்பு நன்மைகள் :** குறைந்தபட்ச கூலி, பகிர்வு முறை சட்டம், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் மூலம் சமூக நல நடவடிக்கைகளை உருவாக்குகின்றது.

**கலப்பு பொருளாதார அமைப்பின் தீமைகள்:**

1. **ஒருங்கிணைப்பு இல்லாமை:** கலப்புத்துவத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் ஒருங்கிணைப்பு இல்லாததாகும்.
2. **போட்டி மனப்பான்மை :** அரசு மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயலாற்ற வாய்ப்பு குறைவு. இவை இரண்டும் போட்டித் தன்மையுடன்தான் செயல்படும்.
3. **திறமையின்மை :** மந்தமான அதிகார முறை, சிவப்பு நாடா முறை, ஊக்கமின்மை ஆகியவை திறமையின்மை ஏற்பட வாய்ப்பு உண்டு.
4. **தேசியமயமாக்கல் பற்றிய பயம் :** தேசியமயமாக்குதல் என்ற பயம் தனியார் துறையின் வளர்ச்சியையும், புத்தாக்க முயற்சியையும் தடை செய்யும்.
5. **விரிவடையும் சமத்துவமின்மை :** வளங்களின் உரிமை, பரம்பரை சட்டம், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.




Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. நான்கு துறை பொருளாதாரத்தில் வருமான வட்ட ஓட்டத்தினை வரைபடத்துடன் விளக்குக.** [PTA-3]




1. நான்கு துறை பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது
2. நிஜ வாழ்க்கையில் நான்கு துறை பொருளாதாரம் காணப்படுகிறது.
3. இந்த மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.
   i) இல்லங்கள் ii) நிறுவனங்கள் iii) அரசு iv) வெளியுறவுத்துறை
4. வெளியிறவுத்துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்.
5. நான்கு துறை பொருளாதாரத்தில் ஒட்டு மொத்த செலவானது.
   $y = C + I + G + (X - M)$

★★★★★★



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அத்தியாயம் 2

# தேசிய வருவாய்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. உற்பத்திக்காரணியின் செலவின் அடிப்படையிலான NNP.** [PTA-3]

அ) தேசிய வருவாய் ஆ) உள்நாட்டு வருமானம்

இ) தலை வீத வருமானம் ஈ) சம்பளம்

**விடை : அ) தேசிய வருவாய்**

**2. முதன்மைதுறை என்பது ______** [PTA-3] [மார்ச்-2020]

அ) தொழில் ஆ) வியாபாரம்

இ) விவசாயம் ஈ) கட்டடம் கட்டுதல்

**விடை : இ) விவசாயம்**

**3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?**

அ) இரண்டு ஆ) மூன்று

இ) ஐந்து ஈ) நான்கு **விடை : ஆ) மூன்று**

**4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?**

அ) வருவாய் ஆ) வரி

இ) செலவு ஈ) வருமானம் **விடை : ஈ) வருமானம்**

**5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?**

அ) செலவிடக்கூடிய வருமானம் ஆ) தனிநபர் வருமானம்

இ) NNP ஈ) GNP **விடை : ஈ) GNP**

**6. ______ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.**

அ) கட்டடத்துறை ஆ) விவசாயத்துறை

இ) பணித்துறை ஈ) வங்கித் துறை

**விடை : அ) கட்டடத்துறை**

**7. மூன்றாம் துறை ______ எனவும் அழைக்கப்படுகிறது.** [PTA-1]

அ) பணிகள் ஆ) வருமானம்

இ) தொழில் ஈ) உற்பத்தி **விடை : அ) பணிகள்**

**8. ஒரு நாட்டின் ______ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.** [PTA-5]

அ) தொழில் ஆ) விவசாயம்

இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு **விடை : இ) பொருளாதாரம்**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**9. ________ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.**

அ) உற்பத்தி ஆ) நாட்டின் மக்கள் தொகை [PTA-3]

இ) செலவு ஈ) GNP

**விடை : ஆ) நாட்டின் மக்கள் தொகை**

**10. GNP = ________ + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்**

அ) NNP ஆ) NDP

இ) GDP ஈ) தனிநபர் வருமானம் **விடை : இ) GDP**

**11. NNP என்பது ________**

அ) Net National Product ஆ) National Net Product

இ) National Net Provident ஈ) Net National Provident

**விடை : அ) Net National Product**

**12. மொத்த மதிப்பிலிருந்து ________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?**

அ) வருமானம் ஆ) தேய்மானம்

இ) செலவு ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு

**விடை : ஆ) தேய்மானம்**

**13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ________**

அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30

இ) மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

**விடை : அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31**

**14. NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ________** [PTA-6]

அ) மொத்த தேசிய உற்பத்தி ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) நிகர தேசிய உற்பத்தி ஈ) தனிநபர் வருமானம்

**விடை : இ) நிகர தேசிய உற்பத்தி**

**15. உற்பத்திப் புள்ளியில் NNPயின் மதிப்பு ______ என அழைக்கப்படுகிறது.** [PTA-5]

அ) காரணி செலவில் NNP ஆ) சந்தை விலையில் NNP

இ) காரணி செலவில் GNP ஈ) தலைவீத வருமானம்

**விடை : அ) காரணி செலவில் NNP**

**16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ________** [PTA-4]

அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்

இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக்கூடிய வருமானம்

**விடை : ஆ) தலைவீத வருமானம்**

**17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ________ என அழைக்கப்படுகிறது.**

அ) பணவீக்க வீதம் ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) GNP ஈ) உண்மைத் தேசிய வருவாய்

**விடை : ஈ) உண்மைத் தேசிய வருவாய்**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**18. கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு?**

அ) சட்டைகளின் எண்ணிக்கை ஆ) மொத்த சொத்து

இ) மாதவருமானம் ஈ) பண அளிப்பு **விடை : இ) மாதவருமானம்**

**19. PQLI என்பது ____________ன் குறியீடு ஆகும்.**

அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன்

இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு

**விடை : ஆ) பொருளாதார நலன்**

**20. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் ____________ லிருந்து வருகிறது.** [PTA-2]

அ) தனியார் துறை ஆ) உள்துறை

இ) பொதுத்துறை ஈ) எதுவும் இல்லை

**விடை : அ) தனியார் துறை**

## பகுதி - ஆ

### ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்.

**21. தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.** [PTA-5][மார்ச்-2020]

தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தப் பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும். (அல்லது)

ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து இயற்கை வளங்களை பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உருவாக்கும் நிகர ஆண்டு வருமானம் அல்லது தேசிய ஈவு தொகை - தேசிய வருவாய் ஆகும். – ஆல்பிரட் மார்ஷல்

**22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**

மொத்த தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பு ஆகும். இதனுடன் நிகர ஏற்றுமதி வருமானமும் சேர்க்கப்பட வேண்டும். (Or)

GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்,

**23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

NNP = GNP - தேய்மானக் கழிவு

NNP காரணி செலவில் = NNP சந்தை விலையில் – மறைமுக வரி + மானியம்

NDP = GDP - தேய்மானம்

**24. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுது?** [PTA-2]

➢ GNP = C + I + G + (X - M) + (R - P)

➢ 1. NNP = GNP - தேய்மானக்கழிவு

2. NNP காரணி செலவில் = NNP சந்தைவிலையில் – மறைமுக வரி + மானியம்.

**25. தனிநபர் வருமானம் என்றால் என்ன?** [மார்ச்-2020]

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு மனிதனுக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும்.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

GDP குறைப்பான் என்பது GDPயில் காணப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைமாற்ற குறியீட்டெண் ஆகும்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை மதிப்பு GDP}} \times 100$$

**27. தேசிய வருவாய் கணக்கீட்டில் ''சுய நுகர்வு'' எவ்வாறு சிரமத்தைத் தருகிறது? [PTA-6]**

விவசாயிகள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி அல்லது பதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தால் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டுபிடிப்பதில்கூட சிக்கல் ஏற்படுகிறது. இதுவே சுயநுகர்வு என்பர்.

## பகுதி - இ

### ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.**

- தலைவீத வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
- தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.
- இது மக்களின் வாழ்க்கை தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- உண்மையான தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் வாழ்க்கைதரம் உயர்ந்ததாகக் கருதப்படும்,

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**29. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? [PTA-5]**

| | தனிநபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|---|
| 1, | ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும். | தனிநபர் தன் சொந்த நுகர்விற்காக செலவிடக்கூடிய பணத்தின் அளவு, |
| 2. | தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள், | செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள், |

**தனிநபர் வருமானம் :-**

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பல வழகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும். தனி



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மனிதனுக்கு கிடைக்கும் வட்டி, வாரம், கூலி, இலாபம் போன்றவை வருமானமாக கருதப்படும். இதில் மாற்று செலுத்துகையான ஓய்வூதியம், பகிரப்படாத கார்பரேட் இலாபம் இவற்றை சேர்த்தால் முழுமையான தனிநபர் வருமானம் கிடைக்கும்.

| தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் + மாற்று செலுத்துகைகள் |
|---|

**செலவிடக்கூடிய வருமானம் :-**

செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. தனிநபர் வருமானத்தில் இருந்து நேர்முக வரிகளை கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம் ஆகும். இந்த வருமானம் தான் தனிநபர் தன் சொந்த நுகர்விற்காக செலவிடக் கூடிய பணத்தின் அளவு ஆகும்.

| செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் - நேர்முக வரிகள் |
|---|

**30. காரணி செலவில் NNP - விவரி.**

**நிகர தேசிய உற்பத்தி :- (NNP)**

நிகர தேசிய உற்பத்தி என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பாகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்படும் மொத்த வருமான செலுத்துதல்கள் ஆகும்.

| காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP - மறைமுக வரி + மானியம் |
|---|

**31. செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.** [PTA-3]

ஓர் ஆண்டு காலத்தில் சமுதாயத்தில் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

GNP = C+I+G+ (X- M)

C = தனியார் நுகர்வு செலவு

I = தனியார் முதலீட்டு செலவு

G = அரசின் கொள்முதல் செலவு

(X-M) = நிகர ஏற்றுமதி இறக்குமதி

**32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் ''இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?** [PTA-6]

ஓராண்டு காலத்தில் அனைத்து தொழில் நிறுவனங்களும் உற்பத்தி செய்த வெளியீடு பண்டங்களின் மொத்த மதிப்பின் கூட்டுத்தொகையே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். இதில் உள்ள மிக பெரிய சிக்கல் இருமுறை கணக்கிடுதல் என்பதாகும்.

ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் உள்ளது. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப்பொருளாக அல்லது இடைநிலைப் பொருளாக உள்ளதோ அதை உற்பத்தி கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் ஜவுளியின் துணியின் விலையும் துணியின் விலையில் நூலின் விலையும், நூலின் விலையில் பஞ்சின் விலையும் உள்ளது.

ஒரு பொருள் இருமுறை விலைபெறுவது இருமுறை கணக்கிடல் என்பதாகும்.

**33. தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

ஒரு நாட்டின் வளர்ச்சியும், பொருளாதார அந்தஸ்தும் அந்த நாட்டின் தேசிய வருவாயைப் பொருத்தே அமைகின்றது. தேசிய வருவாயில் நாட்டு மக்களின் தலா



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



வீத வருமானமும் ஒவ்வொரு ஆண்டு வளர்ச்சியும் அளவிடப்படுகிறது. தலாவருமான உயர்வுதான் நாட்டின் வளர்ச்சி நிலையை உலகிற்கு காண்பிக்கும். ஆனால் தலா வருமானம் மட்டும் நாட்டு வளர்ச்சியை தூண்டுவது இல்லை. சில காரணங்கள் நாட்டு வளர்ச்சி தடைபடவும், வாய்ப்புகள் உள்ளன.

1. நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதனப்பொருள் உற்பத்தி அதிகமாக இருந்தால் பொருளாதார நலன் குறைவாகதான் இருக்கும்.
2. இயற்கை வளம் சுரண்டப்பட்டால் பொருளாதார நலன் குறையும்.
3. இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பு நாட்டுவருவாய் நலன் குறையும்.
4. பெண்களுக்கு வேலைவாய்ப்பு உழைப்பாளர்கள் அதிக நேரம் வேலை செய்ய வைப்பது நலன் பாதிக்க வாய்ப்பு உள்ளது.

**34. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக. (ஏதேனும் 5)**

1. நாட்டு வருமானம் பொருளாதார நிலையை அளவிடவும் நாட்டின் பொருளாதார செயல்பாடுகளை கணக்கிடவும் பயன்படுகிறது.
2. ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் வளர்ச்சி நிலையை அறிய உதவுகின்றது.
3. அளவு பொருளாதார உற்பத்தி அமைப்பு முறை, துறை வாரியான வளர்ச்சியை முன்னேற்றத்தின் எதிர்கால போக்கை அறிந்து கொள்ள பயன்படுகின்றது.
4. பொருளாதார முன்னேற்றத்தின் எதிர்கால போக்கை அறிந்து கொள்ள பயன்படுகிறது.
5. வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கத் தேவையான பொருளாதார திட்டங்கள் மற்றும் கொள்கைகள் வகுக்க அரசுக்கு உதவுகின்றது.
6. முன்னேற்ற இலக்குகளை நிர்ணயிக்க பயன்படுகிறது.
7. பண்டங்களின் எதிர்கால தேவையை முன்கூட்டியே தெரிந்து உற்பத்தி செய்ய நிறுவனங்களுக்கு உதவுகின்றது.
8. மக்களின் வாழ்க்கை தரத்தை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்க பயன்படுகிறது.
9. உற்பத்தி, வாணிபம், நுகர்வு, கொள்கை போன்றவற்றை உருவாக்க பயன்படுகிறது.

## பகுதி – ஈ

### ஒரு பக்க அளவில் பதில் தருக.

**35. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.** [PTA-5][மார்ச்-2020]

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் முக்கிய பங்கு வகுக்கின்றது. தேசிய வருவாய் ‘‘சமூகக்கணக்கு’’ என்றும் கூறலாம்.

1. தேசிய வருவாய் கணக்கிடுவதால் பொருளாதாரத்தில் காணப்படும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் தேசிய வருமானத்தில் பல்வேறு துறைகளின் பங்கு என்ன என்பதை அறிய முடியும்.
2. பொருள்கள் மற்றும் பணிகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டு பகிரப்படுகின்றது. மேலும் எவ்வாறு செலவு செய்யப்படுகின்றன எவ்வாறு சேமிக்கப்படுகின்றன மேலும் எவ்வாறு வரி விதிக்கப்படுகின்றது என்பதை அறிய முடியும்.
3. சரியான பணவியல் மற்றும் பொதுநிதி கொள்கைகள் உருவாக்கம், சரியான பாதையில் பொருளாதாரத்தை எடுத்து செல்லவும் உதவுகின்றது.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



4. திட்டமிடுதலுக்கும் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் உதவுகின்றன.
5. குறுகிய கால மற்றும் நீண்டகால பொருளாதார மாதிரிகளை உருவாக்கப் பயன்படுகின்றது.
6. துறை வாரியான பொருளாதார விபரங்களை அறியவும் பல்வேறு வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும் உதவுகின்றது.
7. தலா வருமானம் கணக்கிடவும், அதன் மூலம் நாட்டின் பொருளாதார நலனை அறியவும் பயன்படுகின்றது.
8. நாட்டின் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமான பகிர்வை தெரிந்து கொள்ள பயன்படுகிறது.
9. பேரியல் காரணியான வரி - GDP
   நடப்புக்கணக்கு - GDP
   நிதிப்பற்றாக்குறை - GDP
   கடன் - GDP போன்ற விகிதங்களை கண்டு அறிந்து கொள்ள உதவுகின்றது.

**36. தேசிய வருவாயை கணக்கிடும் முறைகளை விளக்குக.** [PTA-1]

ஓர் ஆண்டு காலத்தில் நாட்டின் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு தேசிய வருவாய் ஆகும். தேசிய வருவாய் மூன்று முறைகளில் கணக்கிடப்படுகின்றது.

1. உற்பத்தி மற்றும் மதிப்பு கூடுதல் முறை
2. வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை
3. செலவு முறை

**1. உற்பத்தி முறை :-**

1. உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகம்,
2. இம்முறை சரக்குமுறை என்று அழைக்கப்படுகின்றது.
3. தொழில் வணிகம் பேன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.
4. ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

**2. வருமான முறை :-**

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடுதல் என்பது உற்பத்தி செய்யப்பயன்படும் உற்பத்தி காரணிகள் பெறும் அனைத்து விதமான ஊதியங்களை கூட்டினால் கிடைப்பது தேசிய வருவாய் ஆகும்.

$Y = w+r+i+\pi+(R-P)$

w - கூலி
r - வாடகை
i - வட்டி
$\pi$ - இலாபம்
R - ஏற்றுமதி
P - இறக்குமதி



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. செலவு முறை :-**

ஒரு ஆண்டு காலத்தில் நாட்டில் உள்ள அனைவரும் மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகை நாட்டு வருமானம் ஆகும். தனி மனிதனின் சுயநுகர்வு, நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல், செலவு, ஏற்றுமதி செலவு இவை அனைத்தையும் கூட்டினால் கிடைப்பது தேசிய வருவாய் ஆகும்.

$$GNP = C+I+G+(X-M)$$

C என்பது தனியார் செலவு

I என்பது முதலீடு செலவு

G என்பது அரசின் செலவு

X-M நிகர ஏற்றுமதி இறக்குமதி

**37. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?** [PTA-2 & 6]

**1) மாற்று செலுத்துதல்கள் :** ஓய்வூதியம் வேலையின்மைக்கான ஊக்கத்தொகை, மானியம், இவை அரசு அளிக்கும் செலவு ஆகும். இதே செலவுகள் அனைத்தும் தேசிய வருவாயில் சேர்ப்பது கிடையாது. அதே போன்று தேசிய கடனுக்கு வழங்கப்படும் வட்டியும் சேர்ப்பது இல்லை.

**2) தேய்மானங்கள் மதிப்பீடு செய்வதில் சிக்கல் :** தேய்மானம், விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணம், இவைகளை கணக்கீடு செய்வது என்பது மிகவும் கடினமான ஒன்று ஆகும். சரியான முறையில் கணக்கீடு செய்து கழிக்க வேண்டும்.

**3) பணம் செலுத்தப்படாத சேவைகள் :** நம் நாட்டில் பெண்கள் வீட்டு வேலையான உணவு தயாரித்தல், தையல்,துணி துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை கவனித்தல் போன்றவைகளுக்கு எந்தவிதமான பணம் பெறுவது இல்லை. இதனை வருமானத்தில் சேர்ப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

**4) சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் :** சட்ட விரோத செயல்களான சூதாட்டம், கடத்தல், மது தயாரித்தல் போன்ற செயல்கள் மூலம் கிடைக்கும் வருமானம் நாட்டு வருமானத்தில் இடம் பெறுவது கிடையாது.

**5) சுய நுகர்வு, உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :** உற்பத்தி மற்றும் விவசாயம் இவற்றில் ஈடுபடுபவர்கள் தங்களின் சொந்த நுகர்வுக்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைப்பார்கள். அது சந்தைக்கு வருவது இல்லை. நாட்டு வருமானத்தில் இடம் பெறுவது கிடையாது.

**6) மூலதன இலாபம் :** வீடு மற்றும் பிற சொத்துக்கள் பங்குகள் போன்றவை மூலம் லாபம் கிடைக்கும். இது மூலதன லாபமாக இருந்தாலும் நாட்டு வருமானத்தில் சேர்ப்பது கிடையாது.

**7) புள்ளி விபர சிக்கல் :** பொருளாதாரத்தில் புள்ளி விபரங்கள் சேகரிப்பது என்பது மிகவும் கடினமான ஒன்று ஆகும். நம்ப தகுந்த புள்ளி விபரங்கள் சேகரிப்பவரின் கவன குறைவால் திறமை குறைவால் அர்பணிப்பு இன்மையால் சிக்கல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

**38. பொருளாதார ஆய்வில் சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.** [PTA-3 & 4]

சமூக கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. சமூக கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு மற்றும் பல அமைப்புகளின் மாற்றங்களுக்கு இடையே உள்ள தொடர்புகளை கண்டறிவது அவசியமாகும். இது பல்வேறு துறைகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளை நமக்கு விளக்குகின்றது.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**1) சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள் :**

நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாக பிரிக்கப்படுகிறது. இது பல குழு அல்லது பல நிறுவனங்களாக நம் பொருளாதாரத்தில் செயல்படுகின்றது.

1. நிறுவனங்கள்
2. குடும்பங்கள்
3. அரசு
4. வெளிநாட்டு வருமானம்
5. மூலதன துறை

**2) தேசிய வருவாயும் பொது நலனும் :**

சமுதாய கணக்கிடுதலில் தேசிய வருவாயும், பொதுநலனும் மிக அவசியமானதாகும். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்தஸ்து இரண்டும் தேசிய வருவாயைப் பொருத்தே அமைகிறது. தேசிய வருவாய் தலைவீத வருமானமும், அதன் ஆண்டு வளர்ச்சிவீதத்தின் அடிப்படையில் அளவிட சமுதாய கணக்கிடுதல் அவசியமானதாகும்.

1. நுகர்வு பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆடம்பர பொருள்களின் உற்பத்தியை குறைப்பது.
2. இயற்கை வளம் மாசுபடாமல் காப்பது.
3. இராணுவ தளவாட உற்பத்தியை குறைப்பது
4. பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது.

**3) தேசிய வருவாய் மற்றும் நாட்டின் செல்வம் அழிக்கப்படுதல் :**

சமூக நலன் கண்டு அறியப்படவில்லை எனில் நாட்டின் செல்வ வளம் சுரண்டப்பட்டு எதிர்காலத்தில் பற்றாக்குறை, வளங்களின் இழப்பு ஏற்பட்டு சமூக நலன் பாதிப்படைய வழிவகுக்கும்.

ஆகவே பொருளாதார ஆய்வில் சமூக நலன் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக

1.

| | | | |
|---|---|---|---|
| A | நோபல் பரிசு | 1 | வங்கியியல் |
| B | முதன்மைத் துறை | 2 | சைமன் குஸ்நெட் |
| C | இரண்டாம் துறை | 3 | விவசாயம் |
| D | மூன்றாம் துறை | 4 | தொழில்கள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடை : ஈ) (A) 2 ; (B) 3 ; (C) 4 ; (D) 1**

2.

| | | | |
|---|---|---|---|
| A | PQLI | 1 | C + I + G + (X - M) |
| B | $GNP_{MP}$ | 2 | GNP - தேய்மானம் |
| C | NNP | 3 | பொருளாதார நலன் |
| D | GNP | 4 | C + I + G + (X - M) + (R - P) |



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

**விடை : ஆ) (A) 3 ; (B) 4 ; (C) 2 ; (D) 1**

3.

| | | | |
|---|---|---|---|
| A | செலவழிக்கக் கூடிய வருமானம் | 1 | $\frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$ |
| B | தலா வருமானம் | 2 | GDP - தேய்மானம் |
| C | GDP குறைப்பான் | 3 | தனிநபர் வருமானம் – நேர்முகவரிகள் |
| D | NDP | 4 | $\frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$ |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 2 | 3 | 1 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

**விடை : அ) (A) 3 ; (B) 4 ; (C) 1 ; (D) 2**

## II. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) செலவிடக்கூடிய வருமானம் - நுகர்வு + சேமிப்பு
ஆ) தனிநபர் வருமானம் - $\frac{\text{தேசிய வருமானம்}}{\text{செலவிடக்கூடிய வருமானம்}}$
இ) மூலதன இலாபம் - தேசிய வருவாய் கணக்கீட்டின் உள்ளடக்கம்
ஈ) தேசிய வருமானம் - நான்கு முறைகள்

**விடை : ஈ) தேசிய வருமானம் – நான்கு முறைகள்**

2. அ) செலவின முறை - மதிப்பு முறை
ஆ) வருமான முறை - சரக்கு முறை
இ) உற்பத்தி முறை - காரணி வருவாய் முறை
ஈ) உள்ளீடுகள் - உற்பத்தி காரணிகள்

**விடை : ஈ) உள்ளீடுகள் – உற்பத்தி காரணிகள்**

3. **கீழ்காண்பவற்றுள் சரியானதை குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதவும்.** [PTA-4]

A. உற்பத்தி முறை — i. பொருளாதார முறை
B. செலவு முறை — ii. செலவின முறை
C. வருமான முறை — iii. காரணிகள் சம்பாதிக்கும் முறை
D. PQLI — iv. சரக்கு முறை

அ) A - ii, B - i, c - iv, d - iii
ஆ) A - iv, B - ii, c - iii, d - i
இ) A - iii, B - iv, c - ii, d - i
ஈ) A - i, B - ii, c - iv, d - iii

**விடை : ஆ) A - iv, B - ii, c - iii, d - i**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) உழைப்பாளர் வருமானம் - கூலி மற்றும் சம்பளம்
ஆ) மூலதன வருமானம் - இலாபம், இலாப ஈவு
இ) தேசிய வருமானம் - உள்நாட்டு காரணி வருமானம் + மொத்த காரணி வருமானம்
ஈ) கலப்பு வருமானம் - விவசாயம் மற்றும் பண்ணை வருமானம்

**விடை : இ) தேசிய வருமானம் - உள்நாட்டு காரணி வருமானம் + மொத்த காரணி வருமானம்**

2. அ) W - கூலி
ஆ) π - நட்டம்
இ) r - வாரம்
ஈ) i - வட்டி

**விடை : ஆ) π - நட்டம்**

3. அ) C - தனியார் நுகர்வு செலவு
ஆ) I - தனியார் முதலீட்டு செலவு
இ) G - அரசு செலவு
ஈ) X-M - நிகர ஏற்றுமதி

**விடை : ஈ) X-M - நிகர ஏற்றுமதி**

## IV. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) தேசிய வருமானம் என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் J.M.கீன்ஸ் ஆவார்.
ஆ) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.
இ) NDP என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை நிகர உற்பத்தியுடன் கூட்டக் கிடைப்பதாகும்.
ஈ) GNP என்பது ஒரு ஆண்டின் பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பாகும்.

**விடை : ஆ) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.**

2. அ) செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் முதலீடு செய்யக்கூடிய வருமானத்தை குறிக்கிறது.
ஆ) நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.
இ) உண்மை வருமானம் என்பது பணவருவாயின் வாங்கும் சக்தியைக் குறிக்கும்.
ஈ) செலவிடக்கூடிய வருமானம் அனைத்தும் நுகர்விற்கே செலவிடப்படுகிறது.

**விடை : இ) உண்மை வருமானம் என்பது பணவருவாயின் வாங்கும் சக்தியைக் குறிக்கும்.**

3. அ) தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம்.
ஆ) காரணிகளின் வருமானம் உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் நாட்டு வருமானம் என பிரிக்கப்பட்டுள்ளது.
இ) வருவாய் முறையில் இருமுறை கணக்கிடுதல் தவிர்க்கப்படுகிறது.
ஈ) மூலதனத் துறை ஒரு நாட்டின் பன்னாட்டு பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றியதாகும்.

**விடை : அ) தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம்.**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. தவறான கூற்றை தேர்ந்தெடுக்கவும்

1. அ) தேசிய வருவாய் ஒரு நாட்டின் வாங்கும் சக்தியை குறிப்பிடும் காரணியாக இருக்கிறது.

ஆ) உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

இ) இருமுறை கணக்கிடுதல் மதிப்பு கூட்டு முறை மூலமாகத் தவிர்க்கப்படுகிறது.

ஈ) வருவாய் முறை செலவு கூட்டு முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**விடை : ஈ) வருவாய் முறை செலவு கூட்டு முறை என்றும் அழைக்கப்படுகிறது.**

2. அ) மாற்று செலுத்துதல் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

ஆ) இடைநிலை பொருள்களுக்கு செய்யும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக்கூடாது

இ) தேசியக்கடனுக்காக செலுத்தப்படும் வட்டி மாற்றுச் செலுத்துதல்கள் ஆகும்.

ஈ) PQLI என்பது பொருளாதார நலனை கணக்கிடுவதில் முக்கிய குறியீட்டெண்ணாகும்

**விடை : அ) மாற்று செலுத்துதல் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.**

3. அ) எடி மற்றும் பீகாக் வற்றுப்படி அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட நபர்கள்" எனக் குறிப்பிடுகின்றனர்.

ஆ) குடும்பங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.

இ) காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பணபரிமாற்றங்கள் மூலதன துறையில் அடங்கும்.

ஈ) மூலதனத்துறை சேமிப்பையும், முதலீட்டையும் உள்ளடக்கியது.

**விடை : ஆ) குடும்பங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.**

## VI. பொருந்தாத சொல்லை தேர்ந்தெடுக்கவும்

1. அ) உற்பத்தி முறை ஆ) வருமான முறை

இ) முதலீட்டு முறை ஈ) செலவு முறை **விடை : ஈ) செலவு முறை**

2. அ) மாற்று செஉலுத்துதல் ஆ) சமூக கணக்கிடுதல்

இ) பணம் கொடுக்கப்படாத சேவைகள் ஈ) மூலதன இலாபம்

**விடை : ஆ) சமூக கணக்கிடுதல்**

3. அ) காரணி வருமானம் ஆ) உழைப்பாளர் வருமானம்

இ) மூலதன வருமானம் ஈ) கலப்பு வருமானம்

**விடை : அ) காரணி வருமானம்**

## VII. கூற்றை ஆராய்க

1. **கூற்று** (A) : நம்நாட்டில் ஒரு சரியான தேசிய வரமான மதிப்பீடு தருவதில் சிரமங்கள் இருக்கின்றன.



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**காரணம் (R)** : இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்ட மாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு.

அ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு

ஈ) கூற்று (A) தவறு, காரணம் (R) சரி

**விடை : அ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.**

2. **கூற்று (A)** : வருவாய் முறையில் தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.

**காரணம் (R)** : உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

அ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.

ஆ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.

இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு

ஈ) கூற்று (A) தவறு, காரணம் (R) சரி

**விடை : ஆ) கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.**

## VIII. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தனிநபர் வருமானம்**

அ) தேசிய வருமானம் – நேர்முக வரிகள்

ஆ) தேசிய வருமானம் – மறைமுக வரிகள்

இ) தேசிய வருமானம் – சமூக பாதுகாப்பு பங்களிப்பு + மாற்று செலுத்துதல்

ஈ) தேசிய வருமானம் – வெளிநாட்டு நிகர வருமானம்

**விடை : இ) தேசிய வருமானம் – சமூக பாதுகாப்பு பங்களிப்பு + மாற்று செலுத்துதல்**

2. **உண்மை வருமானம்**

அ) நடப்பு விலையில் தேசிய வருவாய் + P1/P0

ஆ) நடப்பு விலையில் தேசிய வருவாய் – P1/P0

இ) நடப்பு விலையில் தேசிய வருவாய் X P1/P0

ஈ) நடப்பு விலையில் தேசிய வருவாய் / P1/P0

**விடை : ஈ) நடப்பு விலையில் தேசிய வருவாய் / P1/P0**

3. **வருமான முறை என்பது.**

அ) Y = W+r+i+II+ (R-P) ஆ) Y = W+i+r+II+ (R+P)

இ) Y = W+r+II+i+ (R/P) ஈ) Y = W+r+i+II+ (RxP)

**விடை : அ) Y = W+r+i+II+ (R-P)**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. மூலதனத்துறை என்பது.**

அ) சேமிப்பையும், வருமானத்தையும் உள்ளடக்கியது

ஆ) சேமிப்பையும், முதலீட்டையும் உள்ளடக்கியது

இ) முதலீட்டையும், உற்பத்தியையும் உள்ளடக்கியது

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : ஆ) சேமிப்பையும், முதலீட்டையும் உள்ளடக்கியது**

**5. மாற்றுச் செலுத்துதல் என்பது.**

அ) வேலையற்றோருக்கு, வயோதியர்களுக்கு அரசு வழங்கப்படும் ஓய்வூதியம்

ஆ) பட்டதாரிகளுக்கும், வறுமையில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம்

இ) நலிவுற்றவர்களுக்கும், வயோதிகர்களுக்கும் அரசு வழங்கப்படும் ஓய்வூதியம்

ஈ) ஏழைகளுக்கும், நலிவுற்றவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம்

**விடை : அ) வேலையற்றோருக்கு, வயோதியர்களுக்கு அரசு வழங்கப்படும் ஓய்வூதியம்**

**6. தலா வருமானம்**

அ) தேசிய வருமானம் – மக்கள் தொகை

ஆ) தேசிய வருமானம் + உண்மை வருமானம்

இ) தேசிய வருமானம் / மக்கள் தொகை

ஈ) தேசிய வருமானம் x உண்மை வருமானம்

**விடை : இ) தேசிய வருமானம் / மக்கள் தொகை**

**7. உற்பத்தி முறையை இவ்வாறும் அழைக்கலாம்.**

அ) கணக்கிடும் முறை ஆ) சரக்கு முறை

இ) விற்பனை முறை ஈ) கொள்முதல் முறை

**விடை : ஆ) சரக்கு முறை**

**8. காரணிகள் சம்பாதிக்கும் முறை என்று எந்த முறை அழைக்கப்படுகிறது.**

அ) உற்பத்தி முறை ஆ) செலவின முறை

இ) வருமான முறை ஈ) சரக்கு முறை

**விடை : இ) வருமான முறை**

**9. NDP – என்பது**

அ) GNP – தேய்மானம் ஆ) GNP – வரிகள்

இ) GDP – தேய்மானம் ஈ) GDP – NNP

**விடை : இ) GDP – தேய்மானம்**

**10. செலவிடக்கூடிய வருமானம்.** [PTA-1]

அ) தனிநபர் வருமானம் + நேர்முக வரிகள்

ஆ) தலா வருமானம் – மறைமுக வரிகள்

இ) தனி நபர் வருமானம் + மாற்று செலுத்துதல்

ஈ) தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்

**விடை : ஈ) தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்**



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. ஓரிரு வார்த்தையில் விடையளி.

**1. நாட்டு வருமான கணக்கீட்டு முறைகள் யாவை?**

1. உற்பத்தி முறை 2. வருமான முறை 3. செலவு முறை

**2. நாட்டு வருமானத் தொடர்புகளின் பெயர்கள் யாவை?** [PTA-2]

1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP)
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GNI)
3. மொத்த நாட்டு வருமானம் (GNI)
4. நிகர நாட்டு உற்பத்தி (NNP)
5. நிகர நாட்டு வருமானம் (NNI)

**3. நிகர தேசிய உற்பத்தி (NNP) என்றால் என்ன?**

நிகர நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டில் பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பாகும். மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு சொத்தின் மதிப்பில் கழித்தால் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தியாகும்.

**NNP = GNP - தேய்மானம்**

**4. தலா வருமானம் என்றால் என்ன?**

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். வருவாயை மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருவாய்}}{\text{மக்கள் தொகை}}$$

**5. உண்மை வருமானம் என்றால் என்ன?**

பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலையின் அளவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

$$\text{தேசிய வருமானம்} = \frac{\text{நடப்பு விலையில் தேசிய வருமானம்}}{P1/P0}$$

**6. மாற்று செலுத்துநிலை என்றால் என்ன?**

அரசாங்கம் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி செய்யும் செலவு மாற்று செலுத்து நிலை என்று பெயர். **(உம்)** ஓய்வூதியம், அரசு மானியம்.

**7. சந்தை விலை என்றால் என்ன?**

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் சந்தை விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் சந்தை விலை என்று பெயர்.

**சந்தை விலை = காரணி செலவு – உதவி தொகைகள்**

**8. சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் என்றால் என்ன?**

சூதாட்டம், கடத்தல் மற்றும் சட்டவிரோதமாக மது தயாரித்தல் போன்றவற்றில் இருந்து கிடைக்கும் வருமானம் சட்ட விரோதமான வருமானம் ஆகும். இவைகள் தேசிய



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



வருமானத்தில் சேர்க்கப்படுவது கிடையாது. இது சட்டத்திற்கு விரோதமான செயலாகும். ஆகவே சட்ட விரோத நடவடிக்கையில் பெறும் வருமானம் என்று பெயர். தனி மனிதன் வருமானம் ஆகும்.

**9. மூலதன இலாபம் என்பதன் பொருள் யாது?**

மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள் பங்கு போன்றவற்றை அதிகமான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமானம் மூலதன லாபம் ஆகும்.

**10. PQLI என்றால் என்ன?** [PTA-1]

பொருளாதார நலனை கணக்கிடுவதில் முக்கிய பங்கு வகிக்கும் குறியீட்டெண் ஆகும். இது மக்களின் வாழ்க்கை தரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு போன்றவையாகும்.

PQLI : Physical Quality of Life Index

## X. ஒரு பத்தியில் விடையளி

**1. மொத்த தேசிய உற்பத்தி எவ்வாறு கணக்கிடப்படுகின்றது?**

மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டின் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முழுமையான பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பு தேசிய உற்பத்தியாகும். இதனுடன் நிகர ஏற்றுமதியின் மதிப்பும் சேர்க்கப்படும்.

$$GNP = C+I+G+(X-M)+(R-P)$$

C - நுகர்வு பொருட்கள்

I - உற்பத்தி பொருட்களின் முதலீடு

G - அரசாங்கம் வாங்கும் பண்டம் மற்றும் பணிகள்

(X-M) - ஏற்றுமதி இறக்குமதி வேறுபாடு

(R-P) - காரணி வருவாய் வேறுபாடு

**2. புள்ளி விபர சிக்கல் எப்போது ஏற்படும்?** [PTA-2]

புள்ளி விபரம் என்பது பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றது. இதனை சேகரிப்பதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன. நாட்டின் வளர்ச்சி நிலையை அறிய புள்ளி விபரம் அவசியமான ஒன்று.

பிரச்சனைகள் :-

1. நம்பகத் தன்மையின்மை
2. சேகரிப்பவரின் திறமை குறைவு
3. அர்ப்பணிப்பு இன்மை

போன்றவை புள்ளிவிபரம் சேகரிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் ஆகும்.

**3. US அடிப்படையில் நாட்டு வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?**

தேசிய வருவாயை பணத்தின் மதிப்பை வைத்து தான் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையை அளவிட முடியும். உ.ம். இந்திய தேசிய வருவாயை அமெரிக்க பணமான டாலரில் சொல்ல வேண்டும். இன்று உலகில் உள்ள அனைத்து நாடுகளின் பணமதிப்பை



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



நிர்ணயம் செய்வது டாலர் ஆகும். இன்று உலக நாடுகள் பெட்ரோல் இறக்குமதிக்கு பயன்படுவது டாலர் ஆகும். இன்று உலக அளவில் பணத்தின் மதிப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுக்கு காரணம் டாலரின் மதிப்பு ஆகும்.

**4. பொருளாதார துறை என்றால் என்ன? அதன் பிரிவுகள் யாவை?**

தனிநபர் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு போன்றவைகளுக்கு இடையே நடைபெறும் பொருளாதார பரிமாற்றங்களை துறை என்கிறோம். இது பலவகையாக பிரிக்கப்படுகின்றது.

1. **நிறுவனங்கள் :-** உற்பத்தி காரணிகளை பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.
2. **குடும்பங்கள் :-** தங்களின் உழைப்பினை அளித்து கூலியை பெற்று அதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன.
3. **அரசு :-** வரி, தண்டனை, கட்டணம் மற்றும் கடன் மூலமாக அரசு நிதியை சேர்த்து பண்டங்களையும் பணியையும் வாங்குகிறது.
4. **வெளிநாட்டு வாணிபம் :-** ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம்.
5. **மூலதன துறை :-** சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீடு, வங்கிகள், நிதிநிறுவனங்கள் இதில் அடங்கும்.

**5. செலவு முறை கணக்கீட்டின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?**

1. **ஏற்கனவே வாங்கிய பொருளை மீண்டும் வாங்குதல் :-** ஏற்கனவே வாங்கப்பட்ட கார், இருசக்கர வாகனம், கைபேசி, இயந்திரம் போன்ற பொருள்களை இரண்டாம் முறை வாங்கும்போது ஏற்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக்கூடாது.
2. **பங்கு மற்றும் பத்திரங்கள் வாங்குதல் :-** பழைய பங்கு பத்திரங்களை இரண்டாம் நிலை அங்காடிகளில் வாங்கும்போது ஏற்படும் செலவுகள் சேர்க்கக்கூடாது.
3. **மாற்று செலுத்து நிலை :-** அரசாங்கம் செய்யும் மாற்றுச் செலத்துதல்களான முதியோர் ஓய்வூதியம் சேர்க்கக்கூடாது.
4. **இடைநிலை பொருட்களுக்கு செய்யும் செலவு :-** விவசாயிகள் விதை மற்றும் உரம் வாங்க செய்யும் செலவு, தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்கள் போன்றவை சேர்க்கப்படக்கூடாது.

**6. நாட்டு வருமானம் கணக்கீட்டில் வருமான முறையின் கணக்கீடுதலின் நிலைகள் யாவை?**

1. மொத்த நிறுவனங்களுக்கு பல்வேறு தொழில் குழுவாக பிரிக்கப்படுகின்றன.
2. உழைப்பாளர் வருமானம் – கூலி சம்பளம் சமூக பாதுகாப்புக்கு முதலாளியின் பங்கு உற்பத்தி திறன் ஊக்க ஊதியம் போன்றவை.
3. மூலதன வருமானம் – லாபம் வட்டி இலாப ஈவு மற்றும் இராயல்டி போன்றவை.
4. கலப்பு வருமானம் – விவசாயம் மற்றும் பண்ணை சிறு தொழில் செய்வோர் மற்றும் பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.
5. உள்நாட்டு காரணி வருவாய்களுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிகர வருவாயை கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

$$Y = W + r + i + \Pi + (R - P)$$

W = கூலி, r = வாடகை, i = வட்டி, II = இலாபம், R = ஏற்றுமதி, P = இறக்குமதி



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## XI. ஒரு பக்க அளவில் விடையளி.

**1. உற்பத்தி முறையில் நாட்டு வருவாய் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை விவரி?**

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இதனை சரக்கு முறை என்பவர். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில் வாணிபம் போன்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் தேசிய வருமானம் ஆகும். இதனை கணக்கீடு செய்யும் போது ஒரு துறையின் வெளியீடு வேறு துறை உற்பத்தியின் உள்ளீடாக அமைய வாய்ப்புள்ளது. இதனை கணக்கில் எடுக்காவிடில் இரண்டு முறை கணக்கில் சேர்ந்து வரும்.

**பண்ணை உற்பத்தியின் மதிப்பு கணக்கிடல் :-**

1. 64 வகை விவசாய பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. இது ஒரு ஹெக்டேருக்கு சராசரி உற்பத்தியை கணக்கிட்டு பயிரிடப்பட்ட நிலபரப்பால் பெருக்கினால் உற்பத்தியின் அளவு கிடைக்கும்.
2. ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.
3. எல்லா பயிர்களின் மொத்த உற்பத்தியை எடுத்துக் கொண்டு விவசாயத்துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.
4. விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம் சரி செய்தல் தேய்மானம் போன்றவற்றை கழிக்க வேண்டும்.
5. மேலும் மற்ற துறைகளான கால்நடை, காடுகள், மீன் வளர்ப்பு, சுரங்க தொழில், தொழிற்சாலை போன்றவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் மொத்த மதிப்பு கணக்கிடப்படுகிறது.

இவை அனைத்தையும் ஒன்று கூட்டினால் நாட்டின் உற்பத்தி முறையில் தேசிய வருவாயை கணக்கிடலாம்.

**2. தேசிய வருவாயின் அடிப்படை கருத்துக்களை விவரி**

தேசிய வருவாயை அளவிடுவதற்கு தேவையான அடிப்படை கருத்துக்கள்

**1. மொத்த உள்நாட்டு உற்பத்தி :- (GDP)**

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலை பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பு உள்நாட்டு உற்பத்தியாகும்.

$$GDP = C + I + G + (X-M)$$

**2. நிகர உள்நாட்டு உற்பத்தி :- (NDP)**

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தியில் தேய்மானத்தை கழித்தால் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP - தேய்மானம்

**3. மொத்த தேசிய உற்பத்தி :- (GNP)**

மொத்த தேசிய உற்பத்தி என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த தேசிய உற்பத்தியாகும்.

$$GNP = C + I + G + (X-M) + (R-P)$$

**4. நிகர தேசிய உற்பத்தி :- (NNP)**

நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின் பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பாகும். GNPயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு முதலீட்டு சொத்தின் மாற்று



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும்.

NNP = GNP - தேய்மான கழிவு

**5. தனிநபர் வருமானம்** :-

ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம்.

**தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் + மாற்று செலுத்துல்கள்**

**6. தலா வருமானம்** :-

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**3. மொத்த நாட்டு உற்பத்தியில் அடங்கியுள்ள ஐந்து வகையான முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளைப் பற்றி குறிப்பு தருக.** [PTA-4]

1. ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு இவை மக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டவை. இதனை நுகர்வு என்கிறோம்.
2. மொத்த உள்நாட்டு மூலதனப் பொருட்களின் தனியார் முதலீடுகளில் இதில் மூலதனத் திரட்சி, வீடு கட்டுதல், உற்பத்திக்காக வைப்பில் உள்ள முடிந்த மற்றும் முடியாத பொருட்கள் ஆகியவை அடங்கும். இதனை முதலீடு (I) எனக் குறிக்கிறோம்.
3. அரசால் வாங்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகள் G எனக் குறிப்பிடப்படுகிறது.
4. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளி நாடுகளிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை (M) கழித்தால் கிடைக்கும் (X-M) நிகர ஏற்றுமதி இது நேர்மறையாகவோ (+), எதிர்மறையாகவோ (-) இருக்கலாம்.
5. நிகர ஏற்றுமதி என்பது வெளிநாடுகளில் இருந்து பெற்ற காரணிகளின் வருவாய்க்கும் நம் நாட்டில் குடியிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்கு கொடுக்கப்பட்ட காரணிகளின் வருவாய்க்கும் இடையே உள்ள வேறுபாடு (R-P) ஆகும்.

$$GNP_{MP} = C + I + G + (X\text{-}M) + (R\text{-}P)$$



Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com